***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 39 |
| NAME | : | தேன்மொழி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 15.07.2025

முதல் விசாரணை

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடிசுத்தும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளிடம் சீட்டு போட்டிருந்தேன். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியாது. அசா.2 அந்தோணிராஜ் அசா.3 டேவிட் அமல்ராஜ் ஆகியோரை தெரியாது. அசா.4 செல்வராஜ் என்பவரை தெரியும். அசா.5 ஜோசப்ராஜ் தெரியாது. அசா.6 அருமைகிளி அசா.7 பாலமுருகன் அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி அசா.12 பொன்பாண்டி, அசா.13 சாந்தி அசா.14 குணசீலன், அசா.15 முத்துலெட்சுமி அசா.16 செல்வகுமாரி அசா.17 முருகன் அசா.18 சரோஜா ஆகியோரை தெரியாது. அசா.19 குமரேசன் என்பவரை தெரியும். அசா.20 மணிராஜ், அசா.21 பொன் சேகர் ஆகியோரை தெரியாது. அசா.22 சுதா . அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி ஆகியோரை தெரியாது. அசா.26 பவளக்கொடி அசா.27 தெய்வகனி அசா.28 செல்வன் ஆகியோரை தெரியும். அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியும் அசா.30 அருள்ஜெலஸ்டீன், அசா.31

அன்னபூரணி ஆகியோரை தெரியாது. அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் தெரியும். அசா.33 முத்துக்கனியை தெரியாது அசா.34 வசுமதியை தெரியும். அசா.35 இருளப்பன் தெரியும் அசா.36 முருகன் என்பவரை தெரியாது. அசா.37 கெலின் ஞானபிரகாசம் தெரியும். அசா.38 மரியசுந்தரி என்பவரை தெரியும். மேற்படி நான் தெரியும் என்று சொன்ன நபர்கள் என் பக்கத்து வீட்டுக்காரர்கள்.

சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகளிடம் சீட்டு போட்டிருந்தேன். ஆஜர் எதிரிகள் 7 குழுக்களாக சீட்டு பிரித்தார்கள். நான் எத்தனை ரூபாய் சீட்டில் சேர்ந்திருந்தேன் என்றால் ரூ.10000 சீட்டில் என நினைக்கிறேன். பணம் என் கணவர் கட்டியதால் எவ்வுளவு கட்டினேன் என்று எனக்கு தெரியவில்லை. சீட்டு பணத்தை மாயவன் கோவிலில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இரவு 7 மணிக்கு கட்டுவார்கள். நான் போட்டிருந்த சீட்டு பணத்தை என் கணவர் கோவிலுக்கு சென்று கட்டுவார். பின்னர் ஒரு வருடமாக சீட்டு பணம் கட்டவில்லை. ஆஜர் எதிரிகள் சீட்டை பிரிக்கவில்லை. அதனால் கட்டவில்லை. நான் சீட்டு பணத்தை கேட்க சென்றபோது சீட்டு பணத்தை தரமுடியாது என எதிரிகள் சொல்லி விட்டனர். நான் எனது மகளின் திருமணத்திற்காக எதிரிகளிடம் சீட்டு போட்டிருந்தேன். தற்போது வரை கட்டிய பணத்தை தரவில்லை. நோட்டை கேட்டதற்கு நோட்டை எரித்து விட்டேன் என சொல்லி விட்டார்கள். பின்னர் எனது கணவர் காவல்நிலையம் சென்றார். யார் புகார் கொடுத்தார் என தெரியாது. போலிஸ் என்னை விசாரித்தார்கள்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மாயவனை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் ரொம்ப வருடமாக தெரியும். அவரது அப்பா பெயர் தெரியாது. மாயவன் கோவிலை நிர்வாகம் செய்வதில் மகேஷ் மாயவனுக்கும், 1ம் எதிரிக்கும் பிரச்சினை உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரி வாத்தியார் என்பதால் அரசு பணியில் இருப்பவர் கோவிலை நிர்வாகம் செய்யகூடாது என மகேஷ் மாயவன் ஒரு பிரிவாகவும், 1வது எதிரி தரப்பில் ஒரு பிரிவாகவும் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் போட்டதாக சொல்லும் சீட்டு என் கணவர் பெயரில் போடபட்டது என்றால் சரிதான். மாயவன் கோவிலில் ஒரு போதும் நான் சீட்டு பணம் செலுத்த சென்றது கிடையாது என்றாலும் என் கணவர் தான் செல்வார் என்றாலும் சரிதான். என் கணவர் தான் எதிரியிடம் சீட்டு பணம் போட்டதாக சொன்னதால் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நோட்டை எல்லாம் எரித்து விட்டதாக சொல்லிய விவரம் என்கணவர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் நான் சொல்லி உள்ள சங்கதிகள் அனைத்தும் என் கணவர் சொல்லி தான்

எனக்கு தெரியும் என்றால் சரிதான். எப்படி சாட்சி சொல்ல வேண்டும் என்ற விவரத்தை என் கணவரும், போலிஸாரும் சொல்லி கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

என் கணவர் மகேஷ் மாயவன் பிரிவை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். என் கொழுந்தன் செல்வமும் மகேஷ் மாயவன் பிரிவை சார்ந்தவர் என்றால் சரிதான். எதிரிகள் சீட்டு பணம் நடத்தியதாக சொன்ன விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் என் கணவரும், என் கொழுந்தனும் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். என் கணவரை விசாரித்தால் தான் அவர் யாரிடம் எவ்வுளவு சீட்டு போட்டார் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸ் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் என் கணவரை தான் விசாரித்தார்கள் என்றாலும் சரிதான். போலிஸ் சொன்னதால் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 38 |
| NAME | : | மரியசுந்தரி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 15.07.2025

முதல் விசாரணை

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடிசுத்தும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளிடம் சீட்டு போட்டிருந்தேன். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியாது. அசா.2 அந்தோணிராஜ் அசா.3 டேவிட் அமல்ராஜ் ஆகியோரை தெரியாது. அசா.4 செல்வராஜ் என்பவரை தெரியும். அசா.5 ஜோசப்ராஜ் தெரியாது. அசா.6 அருமைகிளியை தெரியும். அசா.7 பாலமுருகன் அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி அசா.12 பொன்பாண்டி, அசா.13 சாந்தி அசா.14 குணசீலன், அசா.15 முத்துலெட்சுமி அசா.16 செல்வகுமாரி அசா.17 முருகன் அசா.18 சரோஜா, அசா.19 குமரேசன், அசா.20 மணிராஜ், அசா.21 பொன் சேகர் ஆகியோரை தெரியாது. அசா.22 சுதா என்பவரை தெரியும். அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி ஆகியோரை தெரியாது. அசா.26 பவளக்கொடி, அசா.27 தெய்வகனி அசா.28 செல்வன் ஆகியோரை தெரியும். அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் அசா.30 அருள்ஜெலஸ்டீன், அசா.31 அன்னபூரணி, அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ், அசா.33 முத்துக்கனி ஆகியோரை தெரியாது அசா.34 வசுமதியை தெரியும். அசா.35 இருளப்பன் தெரியும் அசா.36 முருகன் என்பவரை தெரியாது. அசா.37

கெலின் ஞானபிரகாசம் தெரியாது. மேற்படி நான் தெரியும் என்று சொன்ன நபர்கள் என் பக்கத்து வீட்டுக்காரர்கள். 2010 ம் வருடத்திலிருந்து ஆஜர் எதிரிகள் சீட்டு பிரித்தார்கள். 7 குழுக்களாக சீட்டு பிரித்தார்கள். ரூ.61000 சீட்டில் ஒரு சீட்டும், ரூ.60000 சீட்டீல் 1 சீட்டும் போட்டேன். மொத்தம் ரூ.19000 கட்டியிருந்தேன். சீட்டு பணத்தை மாயவன் கோவிலில் ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு சீட்டு பணத்தை கட்டுவேன். சீட்டு பணத்தை நான் கொடுக்கும்போது எதிரிகள் அதை ஒரு நோட்டில் எழுதி கொள்வார்கள்.

கொஞ்ச நாள் கழித்து எதிரிகள் இல்லாமல் போய்விட்டார்கள். பின்னர் எதிரிகள் வந்து விட்டதாக கூறியதால் சீட்டு போட்ட நபர்கள் மாயவன் கோவிலுக்கு சென்றோம். போய் கேட்டதற்கு சீட்டு பணத்தை தரமுடியாது என ஆஜர் எதிரிகள் சொன்னார்கள். பிள்ளை கல்யாணத்திற்காக அனைவரும் சேர்ந்தார்கள் என ஆஜர் எதிரியிடம் சீட்டு போட்டிருந்தேன் தற்போது வரை என் சீட்டு பணம் கிடைக்கவில்லை. வரவு வைத்த நோட்டுகளை காணவில்லை என கேள்விபட்டேன். பின்னர் எதிரி மீது நடவடிக்கை எடுக்க கடையம் காவல்நிலையத்திற்கு சீட்டு கட்டிய அனைவரும் சென்றோம். புகார் கொடுத்த நபர் யார் என்று தெரியாது. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிஸாரிடம் கொடுத்தாக சொல்லும் புகாரில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் கையெழுத்து போட்டேன். என்னுடன் எத்தனை பேர் கையெழுத்து போட்டார்கள் என்றால் நிறைய பேர் போட்டார்கள். அந்த புகாரில் என்ன எழுத பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் யார் எழுதியது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கொடுக்கும் சீட்டு பணத்தை ஒரு தாளில் வரவு வைத்ததை காணாமல் போய்விட்டதாக கேள்விபட்டதாக சொல்லி உள்ள நிலையில் எப்போது கேள்விபட்டேன் என்றால் சீட்டு பணத்தை கேட்க எல்லோரும் சென்ற போது கேள்விபட்டேன். நான் போட்டதாக சொல்லும் ரூ.61000, ரூ.60000 சீட்டிகளில் மொத்தம் எத்தனை பேர் என்று தெரியாது. நான் ஒவ்வொரு வாரமும் எவ்வுளவு சீட்டு பணம் செலுத்துவேன் என்பதை குறிப்பெடுத்து போலிஸாரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

அதே மாதிரி தான் என்னுடன் சீட்டு போட்டிருக்கும் அனைவரும் யார் யார் எவ்வுளவு பணம் செலுத்தி உள்ளார்கள் என்பதை குறிப்பெடுத்து காவல்நிலையத்திறகு வந்தவர்கள் போலிஸாரிடம் கொடுத்தார்கள் என்றால் சரிதான் நான் மாயவன் கோவிலில் வரிதாரர் கிடையாது. மாயவன் கோவிலின் நன்மைக்காக பல ஆண்டுகளுக்கு முன்புஇருந்தே சீட்டு நடத்த பட்டு வருகிறது என்றால் சரிதான். அந்த கோவிலை நிர்வாகம் செய்யும் நபர்கள் சீட்டை நடத்தி 2 வது சீட்டை முழுவதுமாக கோவிலின் நன்மைக்கு எடுத்து கொள்வார்கள் என்றால் சரிதான். அந்த கோவிலை நிர்வாகம் செய்வது சம்பந்தமாக மாயவனுக்கும், மகேஸ் மாயவனுக்கும் பிரச்சினை உள்ளது என்றால் தெரியாது.

மகேஸ் மாயவன் சீட்டு நடத்திய விவரம் எனக்கு தெரியாது. மகேஷ் மாயவன் காவல்நிலையம் வந்தாரா என்றால் வந்தார். அவருடைய ஏற்பாட்டின் பேரில் தான் ஒரு புகார் கொடுக்கப்பட்டு அந்த புகாரில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். கோவில் திருவிழாவில் நான் கலந்து கொண்டதில்லை. மகேஸ் மாயவன் கோவில் நிர்வாகம் செய்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாத நிலையில் காவல் நிலையம் எதற்கு வந்தார் என்றால் தெரியாது. 1வது எதிரி அரசு ஆசிரியர் என்பது தெரியுமா என்றால் தெரியும். நான் சீட்டு போட்டதாக சொல்லும் 2010 முதல் நாளது தேதி வரை 1வது எதிரி அதே ஊரில் தான் இருந்து வருகிறார் என்றாலும் அதே ஊரில்தான் ஆசீரியராக பணி புரிந்து வருகிறார் என்றாலும் சரிதான். மாயவன் கோவிலில் நடந்த சீட்டு பணத்தை தொடர்ந்து நடத்தாததாலும் நான் செலுத்திய பணத்தை திரும்ப தராததாலும் அது குறித்து இந்த புகாருக்கு முன்பாக எந்த புகாரும் கொடுக்கபடவில்லை என்றால் சரிதான். சீட்டு பணம் பிரிக்காத காலத்திலிருந்து எவ்வுளவு நாட்கள் கழித்து நான் சொல்லும் புகார் கொடுக்கபட்டது என்றால் 5,6 மாதங்கள் கழித்து கொடுக்கப்பட்டது. கோவிலில் நடக்கும் சீட்டு பணத்தை எடுத்த நபர்களுக்கு பணம் உடனே கொடுக்கபடும் என்றால் சரிதான்.

நாங்கள் நிறைய பேர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துள்ள நிலையில் சீட்டு பணம் எடுத்தவர்களும் புகார் கொடுக்க வந்தார்கள் என்றால் தெரியாது. சீட்டு பணம் செலுத்தியதாக சொல்லும் காலகட்டத்தில் மாயவன் கோவிலை யார் நிர்வாகம் செய்தார்கள் என்றால் தெரியாது. நான் சொல்வது போல் இந்த எதிரி எவ்வித சீட்டு பணமும் நடத்தி இருப்பது கிடையாது என்றால் சரியல்ல. சீட்டு பணம் நடத்தாத நிலையில் நாங்கள் கொடுக்கும் சீட்டு பணத்தை தாளில் வரவு வைத்திருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. மகேஸ் மாயவனின் தூண்டுதலின் பேரில் கோவிலை நிர்வாகம் செய்வது குறித்து இந்த எதிரிக்கும், மகேஸ் மாயவனுக்கும் பிரச்சினைஇருந்து வருவதால் அதை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்பதற்காக கொடுக்கபட்ட புகாரின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள சங்கதிகளை தான் போலிஸ் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். ரூ.60000 சீட்டிற்கு வாரம் எவ்வுளவு கட்ட வேண்டும் என்றால் ரூ.600 கட்ட வேண்டும். ரூ.61000 சீட்டிற்கு வாரம் எவ்வுளவு கட்ட வேண்டும் என்றால் ரூ.600 கட்ட வேண்டும். நான் இரண்டு சீட்டீற்கும் எத்தனை வாரம் சீட்டு கட்டி உள்ளேன் என்றால் தெரியாது. ஒவ்வொரு வாரத்திற்கும் கழிவு உண்டு என்றால் சரிதான். கழிவு போக தான் சீட்டு பணம் கட்டுவேன் என்றால் சரிதான். இரண்டு சீட்டையும் சேர்த்து கழிவு போக மொத்தம் எவ்வுளவு கட்டி உள்ளேன் என்றால் தெரியாது. நான் சீட்டு போடவில்லை என்றாலும் அவ்வாறு சீட்டு போட்டிருந்தால் எவ்வுளவு கழிவு போகும் என்பது தெரிந்திருக்கும் என்றாலும் சரியல்ல. கழிவு தொகை ரூ.200 சீட்டு பணம் கொடுக்கும் போது தருவார்கள்.

நான் 1 சீட்டை எடுத்துள்ளேன் என்றால் இல்லை. இந்த இரண்டு சீட்டுகளுக்கும் முன்பு ஏற்கனவே சீட்டு போட்டு எடுத்துள்ளேன் அந்த சீட்டு முடிந்த உடன் தான் இந்த சீட்டுகளை போட்டுள்ளேன். நான் ஏற்கனவே போட்டிருந்த சீட்டில் நான் ஏலம் எடுத்த உடன் பணத்தை என்னிடம் தந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

நான் ஒவ்வொரு வாரமும் ஏலத்தில் கலந்து கொள்வேன் என்றால் இல்லை. ஒவ்வொரு சீட்டிலும் இரண்டாவது சீட்டு மாயவன் கோவிலுக்கு என்றால் சரிதான். கோவிலிலிருந்து சீட்டு நடத்தியதால் தான் கோவிலுக்கு எடுத்து கொண்டார்கள் என்றால் சரிதான். இரண்டு சீட்டுகளிலும் அதிகபட்ச ஏலம் எவ்வுளவு போகும் என்றால் தெரியாது. ஏலம் கேட்டவருக்கு சீட்டு பணத்தை உடனே கொடுத்து விடுவார்கள் என்றால் சரிதான். ராசம்மாள் என்பவர் சீட்டு பணத்தை ஏலம் எடுத்து வாங்கி உள்ளார். ஏலம் எடுத்த பின்பு கழிவு இல்லாமல் கட்ட வேண்டும் என்றால் சரிதான். சீட்டு எடுத்த நபர்களும் பணத்தை கட்டவில்லை என்றால் சரிதான். போலிஸார் எப்போது விசாரித்தார் என்றால் எனக்கு படிப்பு அறிவு இல்லாததால் தெரியாது. எங்கு வைத்து விசாரித்தார் என்றால் கடையம் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார். அதன் பின்பு போலிஸார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னை ஆண் போலிஸ் விசாரித்தார். நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்ன மாதிரி இந்த வழக்கிற்கும், 2 வது எதிரிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும் 2 ம் எதிரியோ, அவருக்கு வேண்டபட்டவர் யாருமோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தப்படவில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 37 |
| NAME | : | கெலின் ஞானபிரகாசம் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 15.07.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆசீர்வாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். தோட்டத்திற்கு வருவார்கள். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியாது. அசா.2 அந்தோணிராஜ் அசா.3 டேவிட் அமல்ராஜ் அசா.4 செல்வராஜ் அசா.5 ஜோசப்ராஜ் அசா.6 அருமைகிளி ஆகியோரை தெரியாது. அசா.7 பாலமுருகன் தெரியும். அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி அசா.12 பொன்பாண்டி, அசா.13 சாந்தி அசா.14 குணசீலன், அசா.15 முத்துலெட்சுமி அசா.16 செல்வகுமாரி அசா.17 முருகன் தெரியும். அசா.18 சரோஜா, அசா.19 குமரேசன், அசா.20 மணிராஜ், அசா.21 பொன் சேகர், அசா.22 சுதா, அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி, அசா.26 பவளக்கொடி அசா.27 தெய்வகனி அசா.28 செல்வன் அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் அசா.30 அருள்ஜெலஸ்டீன், அசா.31 அன்னபூரணி, அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ், அசா.33 முத்துக்கனி அசா.34 வசுமதி அசா.35 இருளப்பன் ஆகியோரை தெரியாது அசா.36 முருகன் என்பவரை தெரியும். பஞ்சர்

கடை முருகன் மூலமாக வெய்க்காலிபட்டி கோவிலில் ரூ.61000 சீட்டில் 2 சீட்டுகள் போட்டிருந்தேன். அந்த சீட்டு பணங்களை முருகன் மூலமாக யாரிடம் கட்டுவேன் என்று தெரியாது. 30 சீட்டுகளாக மொத்தம் ரூ.30000 கட்டியிருந்தேன்.

2019 ம் வருடமா, 2020 ம் வருடமா என்று ஞாபகம் இல்லை, அதன் பின் சீட்டு பணம் கட்டவில்லை. அந்த சீட்டு பணத்தை நான் வாங்கவில்லை. பஞ்சர் முருகன் சீட்டு பணத்தை தருகிறேன் என சொல்லி உள்ளார். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

பஞ்சர் முருகன் சீட்டு பணத்தை வெய்க்காலிபட்டி மாயவன் கோவிலில் எதிரிகளிடம் கட்டினாரா என்றால் வெய்க்காலிபட்டி கோவிலில் கட்டினார். அது என்ன கோவில் என்று தெரியாது. எதிரிகளிடம் தான் முருகன் நான் கட்டிய சீட்டு பணத்தை கொடுப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிஸார் விசாரணையில் தற்போது நான் நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொல்லி உள்ள விவரத்தை தான் சொன்னேனா என்றால் இல்லை. புகார் யார் கொடுத்தார் என்று தெரியாது. புகாரில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் போட்டேன். பஞ்சர் முருகன் கையெழுத்து கேட்டார். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது.

1 வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 2 வது எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்வதாக 2 வது எதிரி வழக்கறிஞரால் கூறப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi